மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2014), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு

மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2014) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், சொல்லுங்கள்.*

பிற்பகல் 2-25

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முன்மொழியப்பட்டிருக்கிற, மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தில், ஒரு நிலத்தை கையகப்படுத்தினால், இரண்டு நிகழ்வுகள் நிறைவேற்றப்படாவிட்டால், அந்த நிலம் கையகப்படுத்துவது என்பது காலாவதியாகிவிடும் என குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒன்று, அந்த நிலத்தை அரசு முழுமையாகக் கையகப்படுத்தியிருக்க வேண்டும் அல்லது அந்த நிலத்திற்குக் குறைந்தபட்சம் நஷ்ட ஈடாவது கொடுத்திருக்க வேண்டும். இந்த இரண்டுமே நிறைவேறாதபட்சத்தில் அரசு மேற்கொண்டிருக்கிற அந்த கையகப்படுத்தும் நடவடிக்கை ஒரு காலகட்டத்திற்குப் பிறகு காலாவதியாகிவிடும் என்று அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது எதற்காக என்று சொன்னால், கையகப்படுத்துகிறபோது உரிய காலத்திற்குள் நஷ்ட ஈடு கிடைக்காமல் அந்த மக்கள் அவதிப்படக் கூடாது என்பதற்காகத்தான் அந்த விதி அதில் பொருத்தப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது தமிழ்நாடு அரசாங்கம், அதற்குள்ளே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து அதில் சேர்க்கிறது. அது என்னவென்று சொன்னால், இது இரண்டும் இல்லாமல் இருந்தால்கூட, அதாவது நிலத்திற்கு நஷ்ட ஈடே கொடுக்காமல் இருந்தாலும், அந்த நிலத்தைக் கையகப்படுத்தாமல் இருந்தாலும், அந்த நிலத்தை கையகப்படுத்தியதாகக்கொள்ள வேண்டும் என்ற திருத்தத்தைச் சொல்வதன்மூலம், நிலம் கையகப்படுத்துகிறபோது, விவசாயிகளுக்கு, சம்பந்தப்பட்ட உடைமையாளர்களுக்கு உரிய காலத்தில் நஷ்ட ஈடு கொடுக்கப்படாமல், காலாகாலத்திற்கு அது நீடித்து, அவர்கள் மிகப் பெரிய கொடுமைக்கு ஆளாக்கப்படுவதற்கு*

@ 8—12—2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இந்தச் சட்டத் திருத்தம் வழிவகை செய்கிறது. எனவே, இதைக் குறைந்தபட்சம் நிலைக் குழுவிற்காவது அனுப்பி, இதுபோன்ற சட்டங்களை அவசரமாக நிறைவேற்றுவதற்குப் பதிலாக, நிலைக் குழுவிற்கு அனுப்பி, உரிய பரிசீலனைக்குப் பிறகு, நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்து வைத்த கருத்து நியாயம்தான். முழுமையாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இதற்கு நான் விளக்கம் சொல்லி, நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கிறேன்.*

2013 ஆம் ஆண்டு, புதிய மைய நில எடுப்புச் சட்டத்தில், 24 ஆம் பிரிவின், 2 ஆம் உட்பிரிவின்படி 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின்படி, தொடங்கப்பட்ட நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கைகள் மையச் சட்டம் 30/2013 தொடங்குவதற்கு ஐந்து ஆண்டுகள் அல்லது மிகவும் முந்தையதாக செய்யப்பட்டிருக்கிற தீர்வம் ஒன்றாக இருக்கிறவிடத்து மற்றும் இரண்டு எதிர்பாராச் செலவினங்களும் மனநிறைவளிக்கவில்லையெனில், (i) நிலத்தின் கையுடைமை எடுக்கப்படாமல் இருக்கிறதென்றால் அல்லது (ii) சரியீடு செலுத்தப்படாமல் இருக்கிறதென்றால், அத்தகைய நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கைகள் கால கழிவு ஆகிவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

1894 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டத்தின்படி பல இனங்களில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, ஐந்து ஆண்டுகள் முன் தீர்வம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஆக்கிரமிப்பு பொருட்டும், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வில்லங்கங்களை முன்னிட்டும் அல்லது அதனின் பகுதி ஆக்கிரமிப்பு காரணமாகவும், நிலத்தின் உடைமை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதுபோக சரியீட்டினைக் கோரி, சில நில உரிமையாளர்கள் மனு செய்யவில்லை மற்றும் சரியீட்டு தொகையைப் பெறுவதற்காக வரவில்லை. எனவே, இதுபோன்ற இனங்களில் நில உரிமையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய சரியீட்டுத் தொகை வருவாய் வைப்பீடாக கருவூலத்தில் வைப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. சில நில

2014 டிசம்பர் 8] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

உரிமையாளர்கள் சரியீட்டினைப் பெற மறுத்துள்ளனர். சிலருக்கு நிலம் குறித்த சர்ச்சைகள் உள்ளன. இவற்றிற்கு 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டம் 31(2) ஆம் பிரிவின்படி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இவ்வகையான நேர்வுகளில் 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்படி, மையச் சட்டம் (1) 1894 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளைக் காக்கும்பொருட்டு, அரசு 24 ஆம் பிரிவின், 2 ஆம் உட்பிரிவிற்கான திருத்தம் அவசியம் எனக் கருதி முடிவு செய்கிறது. அது மாத்திரம் அல்ல, அந்த உட்பிரிவு எதற்காகத் தேவைப்படுகிறது என்று சொன்னால், இப்போது நில உரிமையாளர்களுடைய பதிவேடு அரசிடம் இருக்கிறது. ஆனால், அந்த நிலத்திலே, பயனாளிகள் யார், யார் இருக்கிறார்களோ அவர்களுக்கும் இழப்பீடு தர வேண்டும் என்று மைய அரசு வலியுறுத்துகிறது. அப்போது நிலப் பயனாளிகள் என்பதற்கு நம்மிடத்தில் குறிப்பான ஆதரவான டாக்குமெண்ட்டுகள் எதுவுமே கிடையாது. ஆகவே, அதில் குழப்பங்கள் நேர வாய்ப்பு இருக்கின்றது. அதனால்தான் இந்த 24 ஆம் பிரிவு, 2 ஆம் உட்பிரிவிற்கான திருத்தம் அவசியம் என்று அரசு கருதுகிறது. ஆகவே, சரியான அந்த ஆதாரம் உள்ளவற்றிற்கெல்லாம் உடனடியாகத் தரக்கூடிய நிலைமையிருக்கின்றது. ஆகவே, இது அவசியம் என்ற கருத்தின் அடிப்படையில்தான் அரசு இதை முன்மொழிந்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

9. அரசினர் தனித் தீர்மானம்

தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் அமைக்க வகை செய்யும் அரசமைப்பு நூற்று இருபத்து ஒன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவிற்கு ஏற்பளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"That this House ratifies the amendments to the Constitution of India falling within the purview of clause (b) of the proviso to clause (2) of Article 368, proposed to be made by the Constitution (One Hundred and Twenty-first Amendment) Bill, 2014, as passed by both the Houses of Parliament"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, ஏதாவது* Objection *இருந்தால் சொல்லுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை முதலில் நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில், ஒரு முக்கியமான விஷயத்தை மட்டும் நான் சொல்லி,*